மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

(எ) தமிழ்நாடு பன்முறைச் செயற்பாடுகள், காணொலி பதிவுப் பேழைக் கருவி, கம்பிவட தொலைக்காட்சி இணைப்பு ஆகியவற்றின் மூலம் தொலைக்காட்சித் திரையில் படக்காட்சிகள் காட்டுதல் (முறைப்படுத்தப்படுதல்) சட்டமுன்வடிவு, 2002

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு பன்முறைச் செயற்பாடுகள், காணொலி பதிவுப்பேழைக் கருவி, கம்பிவட தொலைக்காட்சி இணைப்பு ஆகியவற்றின் மூலம் தொலைக்காட்சித் திரையில் படக்காட்சிகள் காட்டுதல் (முறைப்படுத்தப்படுதல்) சட்டமுன்வடிவு. மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர்.

பிற்பகல் 12-10

***மாண்புமிகு திரு. கே.கே. பாலசுப்ரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு பன்முறைச் செயற்பாடுகள், காணொலி பதிவுப்பேழைக் கருவி, கம்பிவட தொலைக்காட்சி இணைப்பு ஆகியவற்றின் மூலம் தொலைக்காட்சித் திரையில் படக்காட்சிகள் காட்டுதல் (முறைப்படுத்தப்படுதல்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

திரு. துரைமுருகன்: இந்த மசோதாவை எங்கள் கட்சியின் சார்பில் ஆரம்ப நிலையிலேயே எதிர்க்கிறோம்.

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய அமைச்சர் அவர்கள் தாக்கல் செய்த இந்தச் சட்டமுன்வடிவை பாட்டாளி மக்கள் கட்சி அறிமுக நிலையிலேயே எதிர்க்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. கே.கே. பாலசுப்ரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

8. அறிவிப்புகள்—தொடர்ச்சி

(ஈ) மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், 1990-91 முன்மொழிதல் (ஆ.செ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 1990-91 ஆம் ஆண்டின் மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகளை பேரவையில் முன்மொழிவது குறித்து மேதகு ஆளுநர் அவர்களிடமிருந்து கீழ்க்காணும் செய்தி வரப்பெற்றுள்ளது:

Message

"In pursuance of Clause (2) of Article 205, read with Clause (3) of Article 203, of the Constitution of India, I, P.S. Ramamohan Rao, Governor of Tamil Nadu, hereby recommend to the Tamil Nadu Legislative Assembly to make grants for the demands in respect of amount spent on certain services and purposes during the financial year 1990-91 in excess of the amount authorised or granted for those services and purposes and for that year."